Under Section 173 BNSS

# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8165166

1. District மாவட்டம்: Thiruvallur PS: காவல்நிலையம்: VDAC, Year: ஆண்டு: 2024 FIR No.: மு.த.அ. எண்: 17/AC/2024/TVL Date: நாள்: 18.10.2024 9.30 hrs.

2. (i) Act சட்டம்: The Prevention of Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Corruption Act 1988 Sections பிரிவுகள்: 7(a)
(iii) Act சட்டம்: [as amended in 2018] Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day: குற்ற நிகழ்வு நாள் Date from: நாள் முதல் 10.10.2024 at 15.30 hrs Date to: நாள் வரை 17.10.2024 at 18.00 hrs.
Time Period: நேர அளவு Time from: நேரம் முதல் Time to: நேரம் வரை
(b) Information Received at PS. Date: காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18.10.2024 Time நேரம்: 08.00 hrs
(c) General Diary Reference: Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 18.10.2024 Time நேரம்: 08.00 hrs & 9.30 hrs

4. Type of Information: Written/ Oral தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Oral statement, given by complainant and recorded by me as complaint.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் West, 45 kms
Beat Number: முறைக் காவல் எண் (b) Address: முகவரி Thiruththani PWD office, Thiruvallur Dt.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S: — District: —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

Seen
TPf
18/10/24

Seen
18/10/24

6. Complainant /Informant (a) Name: குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் N. Ramesh (b) Father's/ Husband's Name: தந்தை / கணவர் பெயர் S/o Narasimman
(c) Date / Year of Birth: நாள் / பிறந்த ஆண்டு 51 yrs (d) Nationality: நாட்டினம் (e) Passport No.: வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue: வழங்கப்பட்ட நாள் Place of Issue: வழங்கப்பட்ட இடம்
(f) Occupation: தொழில் farmer. (g) Address: முகவரி NO.4/755, Periya Street, Srivikasapuram Village, R.K.Pettai Tk, Thiruvallur Dt.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவைப்படின் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Ramesh, Assistant Executive Engineer, PWD, Thiruththani, Thiruvallur District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— nil —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : Demanded Rs. 7000/- as bribe
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —nil—
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —nil—.
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted:- When I present at Thiruvallur Vigilance and Anti corruption office on 12.10.2024 at 03.00 hrs one complainant Tr. N. Ramesh Age 51, S/o Narasimman, No. 4/755, Periya Street, Srivilasapuram Village, R.K. Pettai Taluk, Thiruvallur District appeared before me and gave his oral statement as complaint against the accused Tr. Ramesh, Assistant Executive Engineer, PWD, Thiruttani, Thiruvallur District and the oral statement was recorded by me it as follows; [FIR contents will follow in the next separate page....]

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ............................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லைப் கருதி புலனாய்வுக்கு ............................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

N Ramesh 18.10.24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

S. Mala 12/10/2024
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

18.10.2024 at 13.00 hrs

Name: பெயர் S. Mala,
Rank: நிலை ...................... No. எண் ..........
Inspector of Police
VAC, Tvlr.

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.17/AC/2024/TVL, U/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)**

பணிந்து அனுப்பப்படுகிறது, N.ரமேஷ், வயது-51, த/பெ.நரசிம்மன், எண்.4/755, பெரிய தெரு, ஸ்ரீவிலாசபுரம் கிராமம், ஆர்.கே.பேட்டை தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு இன்று 18.10.2024-ம் தேதி காலை சுமார் 8.00 மணிக்கு ஆஜராகி வாய் மொழியாக கொடுத்த புகார் வாக்குமூலம். நான் மேற்படி முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். மேலும் இராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கரில் ஓட்டல் வைத்து நடத்தி வருகிறேன். ஸ்ரீவிலாசபுரம் கிராமத்தில் எனக்கு 4.5 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. எங்கள் ஊர் ஏரியில் இருந்து, என்னுடைய நிலத்திற்கு வண்டல்மண் அடிப்பதற்கான அனுமதியினை ஆர்.கே.பேட்டை தாசில்தாரிடமிருந்து பெற வேண்டும். அதற்காக நான் 02.09.2024-ம் தேதி ஆன் லைன் மூலம் விண்ணப்பம் செய்தேன். விண்ணப்பம் செய்யும்போது தாசில்தாரால் அனுமதி வழங்கப்பட்டால் அதற்கான குறுஞ்செய்தி என்னுடைய செல்போனில் வரும் என சொன்னார்கள். ஆனால் அதுபோன்று குறுஞ்செய்தி ஏதும் வராததால் நான் மீண்டும் 08.10.2024-ம் தேதி ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்தேன். அதன்பின்னர் 10.10.2024 ஆம் தேதியன்று காலை எங்கள் ஊர் கிராம நிர்வாக அலுவலரை தொடர்பு கொண்டு வண்டல் மண் எடுப்பதற்காக நான் விண்ணப்பம் செய்துள்ளது குறித்து தெரிவித்துவிட்டு, எப்போது அனுமதி கிடைக்கும் என கேட்டேன். கிராம நிர்வாக அலுவலர் அவர்கள், தாசில்தாரின் அனுமதியானது எனக்கு ஏற்கனவே ஆன்லைனில் வழங்கப்பட்டுவிட்டதாக தெரிவித்தார். நான் உடனே இ-சேவை மையத்திற்கு சென்று விசாரித்தபோது, எனது விண்ணப்பத்தின்படி வண்டல் மண் எடுப்பதற்கான தாசில்தாரின் அனுமதி 09.09.2024-ம் தேதி வழங்கப்பட்டுவிட்டதாக கூறி அதனை பிரிண்ட் எடுத்து கொடுத்தார்கள். நான் கிராம நிர்வாக அலுவலரை தொடர்பு கொண்ட போது, அவர் PWD அலுவலகத்திற்கு சென்று கேட்குமாறும், அவர்கள் தான் ஏரியில் எங்கு மண் எடுக்கவேண்டும் என இடத்தினை குறித்து தருவார்கள் என தெரிவித்தார். நான் 10.10.2024 ஆம் தேதியன்று பகல் சுமார் 12.00 மணியளவில் திருத்தணியில் உள்ள PWD அலுவலகத்திற்கு சென்று விசாரித்தபோது, SDO அவர்களை சந்திக்குமாறு கூறினார்கள். அந்த அலுவலகத்தில் தனி கேபினில் அமர்திருந்த உதவி செயற் பொறியாளர் திரு,ரமேஷ் அவர்களை சந்தித்த போது, அவர் தாசில்தார் கொடுத்திருந்த அனுமதி உத்தரவினை பார்த்துவிட்டு, அனுமதி வழங்கப்பட்ட நாளிலிருந்து ஒரு மாத காலத்திற்குள்

**(FIR contents, continues to next page.....)**

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.17/AC/2024/TVL, U/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)**

வண்டல் மண்ணை எடுத்துவர வேண்டும் என்றும், அந்த உத்தரவின்படி காலக்கெடு முடிந்துவிட்டதாகவும், எனவே அதனை புதுபித்து வாங்கி வருமாறு சொன்னார். நான் இது குறித்து கிராம நிர்வாக அலுவலரிடம் விசாரித்தேன். அவர் தான் ஆர்.கே.பேட்டை வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருப்பதாக தெரிவித்து என்னை அங்கு வர சொன்னார். நான் ஆர்.கே.பேட்டை தாசில்தாரர் அலுவலகத்திற்கு சென்று, தாசில்தாரை சந்தித்து, வண்டல்மண் எடுப்பதற்காக எனது பெயருக்கு வழங்கப்பட்ட அனுமதி குறித்து எனக்கு தெரியாததால் நான் வண்டல்மண் எடுக்கவில்லை என்று கூறி எனக்கு வழங்கப்பட்ட உத்தரவினை புதுப்பித்து தருமாறு கேட்டேன், ஆர்.கே.பேட்டை தாசில்தார் அவர்கள், என்னிடமிருந்த 09.09.2024 ஆம் தேதி அவரால் வழங்கப்பட்டிருந்த உத்தரவின் நகலில், 16.10.2024, 17.10.2024 ஆகிய தேதிகளில் வணடல்மண் எடுக்க அனுமதி அளித்து கையொப்பம் செய்து கொடுத்தார். நான் அந்த உத்தரவினை எடுத்துக்கொண்டு, 10.10.2024-ம் தேதி அன்றே மதியம் சுமார் 3.30 மணியளவில் திருத்தணியில் உள்ள PWD அலுவலகத்திற்கு சென்று உதவி செயற் பொறியாளர் திரு.ரமேஷ் அவர்களை சந்தித்த போது, அவர் தாசில்தார் அனுமதி கொடுத்திருந்த உத்தரவினை பெற்றுக்கொண்டு மேற்படி உத்தரவின் படி ஏரியிலிருந்து மண் எடுக்கும் போது கண்காணிப்பதற்காகவும், எந்த இடத்தில் மண் எடுக்கவேண்டும் என குறித்து கொடுப்பதற்க்காகவும் அலுவலக பணியாளர் ஒருவரை அனுப்பிவைப்பதாகவும், அதற்கான வேலைகளை செய்து கொடுக்க தனக்கு தனியாக ரூ.10,000/-ம் கொடுக்க வேண்டும் என சொன்னார். என்னால் அவ்வளவு கொடுக்க முடியாது என கூறியபோது சரி ரூ.7,000/-ம் கொடுங்கள் என்றும், பணத்தினை நான் சொல்லும் G.Pay எண்ணிற்கு அனுப்புங்கள் என சொல்லி தாசில்தாரால் எனக்கு வழங்கப்பட்டிருந்த உத்தரவு ஆணையை ஒரு நகல் எடுத்து அதன் பின்புறம் 9791080703, Prasanth என்று பென்சிலால் எழுதி என்னிடம் கொடுத்தார். நான் அவரிடம் G.Pay மூலம் பணம் அனுப்ப தெரியாது என சொன்னேன். உடனே அவர் பணத்தை எடுத்துக்கொண்டு திங்கள்கிழமை அலுவலகத்திற்கு வந்து தன்னிடம் கொடுக்குமாறு தெரிவித்தார். திங்கள் கிழமை அன்று நான் அலுவலகத்தில் இல்லை என்றால் அவரது அருகில் இருந்த ஒரு நபரை காட்டி அவரிடம் பணத்தினை கொடுத்துவிட்டு செல்லுமாறு சொன்னார். மேலும் ஏரிக்கு வந்து மண் எடுக்க வேண்டிய இடத்தினை குறித்து கொடுக்கும் பணியாளருக்கும் ஒரு நாளைக்கு ரூ.1,000/- கொடுக்க

**(FIR contents, continues to next page.....)**

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.17/AC/2024/TVL, U/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)**

வேண்டும் என்றும் சொன்னார். நான் மிகவும் கஷ்டத்தில் இருக்கிறேன், பார்த்து செய்து கொடுங்கள் என கேட்டுக்கொண்டு அந்த அலுவலகத்திலிருந்து வந்துவிட்டேன். எனது சொந்த வேலை காரணமாக என்னால் திங்கள்கிழமையன்று திருத்தணி PWD அலுவலகம் செல்ல முடியவில்லை. 15.10.2024 ஆம் தேதியன்று அதிகமாக மழை பெய்ததால் மண் எடுப்பதற்கான வேலைகளை என்னால் மேற்கொள்ள முடியவில்லை. எனவே நேற்று 17.10.2024 ஆம் தேதியன்று மதியம் 3 மணியளவில் நான் ஆர்.கே.பேட்டை தாசில்தார் அலுவலகத்திற்கு சென்று, தாசில்தாரை சந்தித்து, மழையின் காரணமாக அனுமதி வழங்கப்பட்ட 16.10.2024 மற்றும் 17.10.2024 ஆம் தேதிகளில் மண் எடுக்க முடியவில்லை என்பதை தெரிவித்து, அடுத்து வாரத்திற்கு அனுமதி தருமாறு கேட்டேன். ஆர்.கே.பேட்டை தாசில்தார் அவர்கள் என்னிடமிருந்த நகலை வாங்கி அதில் அவர் 10.10.2024 தேதியன்று வழங்கிய உத்தரவினை பேனாவால் அடித்துவிட்டு 21.10.24, 22.10.24 மற்றும் 23.10.24 ஆகிய மூன்று நாட்களுக்கு அனுமதியளித்து எழுதி கையொப்பம் செய்து கொடுத்தார், நான் அதனை எடுத்துக்கொண்டு, நேற்று மாலை சுமார் 6.00 மணியளவில் திருத்தணியில் உள்ள PWD அலுவலகத்திற்கு சென்று உதவி செயற்பொறியாளர் திரு,ரமேஷ் அவர்களை சந்தித்து, தாசில்தார் அனுமதி கொடுத்திருந்த உத்தரவினை அவரிடம் கொடுத்தேன். அதை வாங்கி கொண்ட அவர், "நான் கேட்ட பணம் என்னாச்சு" என கேட்டார். மேலும் அவர் "ஏற்கனவே கேட்ட பணம் ரூ.7,000/-த்தை எடுத்துக்கொண்டு நாளை 18.10.2024-ஆம்தேதி காலை அலுவலகம் வந்து பணத்தை கொடுத்துவிட்டு வேலையை முடிச்சுட்டு போங்க" என்று சொன்னார். அவர் லஞ்சமாக தான் பணம் கேட்கிறார் என தெரிந்துக்கொண்டேன். திருத்தணி PWD அலுவலகத்தில் உதவி செயற் பொறியாளராக பணிபுரியும் திரு,ரமேஷ் அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் கொடுத்து ஏரியிலிருந்து வண்டல்மண் எடுப்பதற்கு எனக்கு விருப்பம் இல்லை. எனவே உதவி செயற பொறியாளர் திரு,ரமேஷ் அவர்கள் கேட்ட லஞ்சபணம் ரூ,7,000/-ஐ எடுத்துக்கொண்டு இன்று 18.10.2024 ஆம் தேதி காலை சுமார் 8.00 மணிக்கு திருவள்ளூரில் உள்ள விஜிலென்ஸ் அலுவலகம் வந்து உதவி செயறபொறியாளர் திரு,ரமேஷ் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க கேட்டு வாய் மொழியாக புகார் செய்தேன். தங்களுடைய சட்டப்படியான நடவடிக்கைக்கு முழு ஒத்துழைப்பு கொடுப்பேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு தமிழ் படிக்க தெரியும். எழுத தெரியாது. நான் சொல்ல சொல்ல காவல் ஆய்வாளர்

**(FIR contents, continues to next page.....)**

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.17/AC/2024/TVL, U/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)**

ஆகிய தாங்கள் கம்பியூட்டரில் ஒரு புகார் வாக்குமூலமாக டைப் செய்து பிரிண்ட் எடுத்து, எனக்கு படித்து காண்பித்தீர்கள். நான் சொன்னபடி சரியாக இருந்தது. SdXXX N.Ramesh 18.10.2024.

Sir, The oral statement of the complainant was recorded by me. SdXXX(S.Mala), Inspector of Police, V&AC, Thiruvallur.18.10.2024.

**Honoured Sir,**

The oral statement of the complainant was recorded by me at about 08.00 hrs and 08.30 hrs on 18.10.2024 and after getting proper permission from DVAC on this complaint enquiry is conducted in a discreet manner. Based on the outcome of the enquiry, the antecedents of the accused, the reputation of the accused and genuineness of the complainant are verified. Since, there is prima-facie made out to register a FIR on said complaint. Hence, I registered a case in Thiruvallur V&AC, Cr.No17/AC/2024/TVL u/s. 7(a) of The Prevention of Corruption Act-1988 (as amended in 2018) on 18.10.2024 at about 09.30hrs.

S. Mala 18/10/2024
**(S.MALA),**
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Thiruvallur.

The original complaint and FIR are sent to the court of Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Thiruvallur and the other copies to the concern officers.

S. Mala 18/10/2024.
**(S.MALA),**
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Thiruvallur.